පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 397

ආයතනයේ නම : ලංකා සතොස ලිමිටඩ්

පාර්ලිමේන්තුවේ පොදු ව්‍යාපාර පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 120 (4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 397

நிறுவனத்தின் பெயர் : லங்கா சதொச லிமிட்டட்

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 120(4) இன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliament Series No : 397

Name of the Institution: Lanka Sathosa Limited

Submission of observations of the Hon. Minister in charge of the Institute and steps taken with regard to the reports tabled by the Committee on Public Enterprises in terms of Standing Order No.120 (4)

#	விடயம்	குழுவின் விதப்புரைகள்	நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்
6	**நிறுவனம் தொடர்பான விடயங்கள்**		
6.1	லங்கா சதொச லிமிரெட்டை தாபித்தல்	கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள், லங்கா சதொச கம்பெனியின் நடவடிக்கைகளுக்கு தடையாக அமைதலாகாது என்பது	COPE விதப்புரையின்பேரில் லங்கா சதொச கம்பெனியின் அலுவல்களை தனிவேறான சட்டக்கூறு என்ற வகையிலும் தனியார் கம்பெனி என்ற வகையிலும் நிகழ்காலத்தில் செயலாற்றப்பட்டு வருகின்றது.
6.2	லங்கா சதொசவின் நோக்கும் நோக்கங்களும்	i. கம்பெனியின் நோக்கையும் நோக்கங்களையும் மீளாய்வு செய்தல் ii.கம்பெனியின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிகழ்காலத்திற்கு பொருந்தக்கூடியவகையில் மாற்றியமைத்துக்கொள்ள வேண்டுமென்பது	2026 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அதற்கிணங்க கம்பெனியின் நோக்கு மற்றும் நோக்கங்கள் வரிசை அமைச்சிடம் அறிவிக்கப்பட்டுள்ளது.
6.3	இடர்வரவுக் குழு	இடர்வரவு சம்பந்தமான ஆய்வினைக்கொண்ட குழுவொன்றும் இடர்வரவு பற்றிய திட்டவட்டமான தகவலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உத்தியோகத்தரொருவரும் இருக்கவேண்டுமென்பது	பணிப்பாளர்சபை உத்தியோகத்தர்கள் மூவரின் பங்கேற்புடன் 2026 01.22 ஆந் திகதி முதலாவது இடர்வரவுக் குழு (Risk Committee) பிரதம உள்ளக கணக்காய்வாளரின் நெறிப்படுத்தலின் கீழ் கொண்டுவரப்பட்டது.
6.4	உபாயமார்க்கத் திட்டம்	i. புதிய அரசாங்கத்தின் கொள்கைகளுடன் ஒத்துவரத்தக்கவகையில் கூட்டுத் திட்டத்தை இற்றைப்படுத்தி கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமும் குழுவிடமும் சமர்ப்பித்தல்.	2025 - 2029 ஆண்டுக்காக உபாயமார்க்கத் திட்டத்தின் அலுவல்கள் ஏறக்குறைய 50% நிறைவு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய அலுவல்களை நிறைவுசெய்து 02

		ii. கூட்டுத்திட்டம் வருடந்தோறும் இற்றைப்படுத்தப்படத்தக்க (Rolling Model) வகையில் தயாரிக்கப்படல்	வாரங்களுக்குள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
6.5	செயற்பாட்டுத் திட்டம்	i. செயற்பாட்டுத் திட்டத்தை குழுவிடமும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமும் சமர்ப்பித்தல்.	2026.01.21 ஆந் திகதியன்று தயாரித்து நிறைவுசெய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட திட்டங்கள் தலைவரின் அங்கீகாரத்திற்காகவும் எதிர்கால நடவடிக்கைளுக்காகவும் 2026.01.26 ஆந் திகதி வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
6.6	வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்	i. 2023 ஆண்டின் வருடாந்த அறிக்கை, கணக்குகளை பரிசோதிப்பதற்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அந்த அறிக்கையை துரிதமாக சபையில் சமர்ப்பிக்க அவசியமான நடவடிக்கைளை மேற்கொள்ளல்.	2023 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய வருடாந்த அறிக்கை அச்சிடுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதோடு அதன் பின்னர் பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது

6.7	உள்ளக கணக்காய்வு	பிரதிப் பொது முகாமையாளர்- உள்ளக கணக்காய்வு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியில் பதிற்கடமையாற்றுவதற்காக நியமிக்கப்படுகின்ற தருணத்தில் அவரிடம் கையளிக்கப்பட்டிருந்த பி.பொ.மு. உள்ளக கணக்காய்வு பதவியின் கடமைப் பணிகளிலிருந்து அவரை விடுவித்தமை தொடர்பான நடப்பு நிலைமை	அப்போதைய உள்ளக கணக்காய்வுப் பிரிவில் இருந்த பிரதி பொதுமுகாமையாளர் – உள்ளக கணக்காய்வு முழுமையாகவே அந்த பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளதோடு அவர் முழுநேர நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியில் செயலாற்றி வருவதோடு உள்ளக கணக்காய்வுப் பிரிவில் பிரதம உள்ளக கணக்காய்வாளரின்கீழ் சுயாதீனமாக அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
6.8	பணியாட்டொகுதி உள்ளடக்கம்	i. கம்பனியின் மிகவும் பிரதானமான பொறுப்புவாய்ந்த பதவியான நிறைவேற்றுத்தர பதவிகளை ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளவும் பதிற்கடமை அடிப்படையில் பேணிவருதலும் ஆகிய விடயங்கள் சம்பந்தமாக முழுமையான கவனத்தைச் செலுத்துதல். ii. பணியாட்டொகுதி வெற்றிடங்கள் சம்பந்தமான கோரிக்கைகள் பற்றி மீள்பரிசீலனை செய்தல் iii. திட்டவட்டமான அங்கீகரிப்புகளின் பின்னர் ஆட்சேர்ப்பு நடவடிக்கைளை மேற்கொள்ளல் iv. நிறுவனத்தின் பணியாட்டொகுதி சம்பந்தமான முழுமையான அறிக்கையொன்றைத் தயாரித்தல்	ஏற்கெனவே புதிய பணியாட்டொகுதி அங்கீகாரத்தின் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியின் அனைத்துப் பதவிகளும் மீளாய்வு செய்யப்பட்டு புதிய பணியாட்டொகுதிக்கான அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் இந்த பதவிப்பெயர்கள் அனைத்துமே சரிசெய்யப்படும்.

		V.நிறுவனத்தின் மாதிரியுடன் ஒத்துவரத்தக்க ஊழியர் குழாத்தைப் பேணிவருதல்.	
6.9	விற்பனை நிலையங்களும் கையிருப்பு முகாமைத்துவமும்	கம்பெனி இலாபமீட்டுவதற்காக சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் கொண்டுள்ள பொறுப்பு	இதன்பொருட்டு ஒவ்வொரு பிரிவினையும் உள்ளடக்கிய உத்தியோகத்தர்களைக்கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. முறையான சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பப்படுதலைப்போன்றே கிரய நன்மைப் பகுப்பாய்வொன்றையும் (Cost Benefit Analysis) சரிவர மேற்கொண்டு இலாபகரமான நிலையில் இருப்பின் மாத்திரம் வர்த்தக நிலையங்களை திறத்தல்
6.10	வங்கி மேலதிகப்பற்று வட்டி	வங்கி மேலதிகப்பற்று வட்டி தொடர்பிலான நடப்பு நிலைமை	2025 இல் லங்கா சதொசவிடம் நிலவிய வங்கி மேலதிகப்பற்று 2025 வசதி 2025/12/22 பொது திறைசேரியால் முழுமையாகவே தீர்க்கப்பட்டுள்ளதோடு தற்போது குறைந்த பட்ச மேலதிகப் பற்று வசதியின்கீழ் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ப்பட்டு வருகின்றன.
7.	**2023 யூன் 22 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட விதப்புரைகளை அமுலாக்குவதிலான முன்னேற்றம்**		
7.1	2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அரிசி இறக்குமதி	i. இவ்விதமாக நிறுவனத்திற்கு பாரிய நட்டம் இடம்பெற்றமை தொடர்பில் பொறுப்புக்கூறவேண்டிய தரப்பினர்களை இனங்காண்பதற்காக உள்ளக விசாரணையொன்றை மேற்கொள்ளல்.	இத்துடன் தொடர்புடைய விரிவான அறிக்கை ஏற்கனவே கணக்காய்வாளர் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கணக்காய்வாளர் திணைக்களத்தின் தலையீட்டுடன் தொடர்ந்து நடவடிக்கைகள்

		ii. இது சம்பந்தமான சட்டமுறையான செயற்பாங்கு சம்பந்தமாக கவனம் செலுத்துதல்.	எடுக்கப்படும்.
8	**2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைளிலிருந்து வெளிப்படுகின்ற விடயங்களும் நடப்பு நிலைமையும்**		
8.1	ஊக்குவிப்பு படிகள்	i. இது சம்பந் தமாக திட்டவட்டமான கவனம் செலுத்தி அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.	2021,2023 மற்றும் 2024 ஆம் ஆண்டில் ஊக்குவிப்பு படிகள் வழங்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு கட்டுப்பட்டதாக செலுத்துதல்கள் மேற்கொள்ளப்பட்டன. எதிர்காலத்தில் ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்படுமாயின் அது சம்பந்தமாக பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
8.2	கம்பெனியின் கட்டிடங்களை வாடகைக்குப் பெறல்	கட்டிட உரிமையாளர் 29 பேரில் 18 பேருக்கு எதிராக பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை.	லங்கா சதொசாவின் சட்டப் பிரிவின்படி, வாடகை முன்பணமாக ரூபாய் 36 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. அது ஐந்து (05) ஆண்டுகளாக முன்னோக்கி கொண்டு வரப்பட்ட நிலுவையாகப் பதிவு செய்யப்பட்டு உள்ளது. அந்தத் தொகையை முழுமையாக மீட்டெடுக்க சட்டப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. எனினும், நிறுவனம் தற்போது இந்தச் சொத்திற்காக எந்தவொரு வாடகையும் செலுத்தவில்லை.
8.3	கிளிநொச்சி நகரத்தில் அமைந்துள்ள கம்பெனிக்குச் சொந்தமான 15000 சதுர அடி பரப்புடைய கட்டிடத்தை குத்தகைக்கு விடுதல்.	i. இந்த கட்டிடத்தை மீண்டும் கம்பெனிக்கு உரிமையாக்கிக் கொள்வதற்கான இயலுமை பற்றி பரிசீலனை செய்ய அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.	இந்த கட்டிடத்தை மீண்டும் கம்பெனிக்கு உரித்தாக்கிக்கொள்வதில் நிலவுகின்ற அவசியம் காரணமாக சட்டப்பிரிவு ஊடாக மேற்படி கட்டிடத்திலிருந்து அகன்று செல்லுமாறு தரப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

		ii. உள்ளக கணக்காய்வினை பலப்படுத்துதலும் புலன்விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.	இது சம்பந்தமான எதிர்கால நடவடிக்கைகள் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
8.4	பிரதிப் பொதுமுகாமையாளர் (சந்தைப்படுத்தல்) பதவியை Head of Online Trading என மாற்றியமைத்தல்	சம்பளம் செலுத்துதல் சம்பந்தமானது	2025 04.26 அந் திகதி தொடக்கம் Head of Marketing எனும் பதவி ஒழிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தரின் ஒப்பந்தக் காலப்பகுதி முடிவுறுத்தப்பட்டது. எதிர்காலத்தில் பிரதிப் பொதுமுகாமையாளர் சந்தைப்படுத்தல் ஒ பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
8.5	வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையங்களுக்கான உரிமம் வழங்குவதற்கான ஆலோசகரொருவரை நியமித்தல்.	i. ஆட்சேர்ப்பு சம்பந்தமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் தீவிர கவனம் செலுத்தப்படவேண்டுமென்பது ii. பணியாட்டொகுதியின் ஆட்சேர்ப்பு சம்பந்தமாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து நியமனங்களுடனும் தொடர்புடைய பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைத்தல்	பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் வெளிநாட்டு மதுபான சாலைகளை அங்குரார்ப்பணம் செய்வதற்காக உத்தியோகத்தரொருவர் மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தும் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார் . அவசியமான அறிவும் அனுபவமும் வாய்ந்த உத்தியோகத்தர்கள் நிறுவனத்தில் இல்லாமையால் அது பற்றிய விசேட அறிவுபடைத்த ஒருவரின் சேவை பெறப்பட்டது. அவருடைய சேவை 2025.08.14 ஆந் திகதி தொடக்கம் முடிவுறுத்தப்பட்டுள்ளதுதற்போது அந்த கடமைகளுக்காக நிரந்தர ஊழியரொருவரை ஈடுபடுத்தி சேவையைப் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

8.6	சீனி வரியைக் குறைத்தமையால் கம்பெனி ஏற்கநேரிட்ட நட்டம்	அறவிடப்பட்டிராத நட்டம் ரூ. 64,954,000 என்பது	அப்போது சீனிக் கொள்வனவுடன் தொடர்புடைய கடிதக்கோப்புகள் அனைத்தும் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட் டுள்ளது.
8.7	ஒருங்கிணைந்த தாபன திட்ட முறைமை (Integrated Enterprise Resource Palnining)	ERP System இற்கான நேரடி இடையீடு அவசியமென்பது	கம்பெனியில் நிகழ்காலத்தில் பேணிவரப்படுகின்ற E wis POS System சம்பந்தமாக நிலவுகின்ற ஒருசில சிக்கலான தன்மைகொண்ட கொடுக்கல் வாங்கல்கள் பதிவாகியுள்ளதால் அதுசம்பந்தமாக முறைமை கணக்காய்வொன்று (System Audit) மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் முறைமைக்குள் இருக்கின்ற வழமைக்கு மாறான கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக பணிப்பாளர்சபை அங்கீகாரத்தின்படி தடயவியல் கணக்காய்வொன்று மேற்கொள்பட்டு வருகின்றது. அதன்படி எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ப்பட உள்ளன.
8.8	செயலாற்றுகை கொடுப்பனவும் தொழில்சார் கொடுப்பனவும்	i. செயலாற்றுகை கணக்காய்விற்கு உள்ளாக்கப்படல் வேண்டுமென்பது ii. உள்ளக கணக்காய்வு பொறுப்புடன் செயலாற்ற வேண்டுமென்பது	இந்த உத்தியோகத்தரளின் ஒப்பந்தக்காலத்தை வருடந்தோறும் மதிப்பீடுசெய்ய (Evaluation) நடவடிக்கை எடுத்துவருகின்ற அதேவேளையில் அந்த மதிப்பீட்டின் முன்னேற்றத்தை பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிட்ட பின்னர் சேவை நீடிப்பினை வழங்குதல் அல்லது ஒப்பந்தத்தை முடிவுறுத்துதல் மேற்கொள்ளப்படும்.

8.9	போக்குவரத்துப் படி	போக்குவரத்துப் படி உரித்தாகாத உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்துப்படி செலுத்துதல் மற்றும் பிரதிப் பொதுமுகாமையாளர்களின் போக்குவரத்துப் படியை திறைசேரியின் அங்கீகாரமின்றி அதிகரித்தமை	அவ்வாறு செய்யாவிட்டால் தொடர்ந்தும் அந்த பதவியில் உத்தியோகத்தர்களை தக்கவைத்துக்கொள்ள இயலாமல் போய்விடும். நிறுவனத்தை இலாபகரமான நிலைக்கு மாற்றியடைத்திட திறமையும் அனுபவமும் வாய்ந்த உயர்மட்ட உத்தியோகத்தர் குழுவொன்று இருக்கவேண்டியது அத்தியாவசியமான விடயமாகும். எதிர்காலத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி இப்பதவிகளை நிரந்தரமாக்கிகொள்ள அவசியமான வழிமுறைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.
9	**<u>நிகழ்கால செயலாற்றுகை சம்பந்தமான அவதானிப்புகள்</u>**		
9.1	2013 ஆம் ஆண்டில் நேரடியான மனித நுகர்விற்கு பொருத்தமற்ற இறக்குமதிசெய்த சீனியை சந்தைப்படுத்தியமை.	i. 2020 ஒக்டோபர் மாதம் 14 அந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரத்தக்கதாக சீனிக்காக அறவிடப்பட்ட வரியைக் குறைத்தமையால் கம்பெனிக்கு விளைந்த நட்டம் சம்பந்தமாகவும் 2023 ஆம் ஆண்டில் மனித நுகர்விற்கு பொருத்தமற்ற சீனியை சந்தைப்படுத்தியமை ஆகிய 2 விடயங்கள் உள்ளடங்கத்தக்கவகையில் தடயவியல் கணக்காய்வொன்றினை மேற்கொள்ளல்.	இது சம்பந்தமாக முந்திய வருடங்களில் வழமைக்குமாறான கொடுக்கல் வாங்கல்கள் பதிவாகியமையால் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்படுகின்ற தீர்மானத்தின்படி தடயவியல் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

10	**<u>ஏனைய விடயங்கள்</u>**		
10.1	ஜாஎல மற்றும் பம்பலபிட்டிய வர்த்தக நிலையங்கள்	-	பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி நட்டத்தில் இயங்குகின்ற விற்பனை நிலையங்களை மூடிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோ,டு மேற்படி விற்பனை நிலையங்களில் இருந்த கையிருப்புகள் பிற விற்பனை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு இந்த கட்டிடங்கள் உரிமையாளரிடம் கையளிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.